சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
சித்திரை 10
ஜமா. அவ். 13
ஞாயிறு (23-4-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 91
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60

● தந்தை நினைவு நாளையொட்டி கலைஞர் கருணாநிதி செய்தி!

# செல்வா எண்ணம் ஈடேறிட தொய்வின்றி பணியாற்றிடுக!

மூதறிஞர் தந்தை செல்வா அமரராகி எதிர்வரும் ஏப்ரல் 26ம் திகதி ஓராண்டு நிறைவு பெறுகின்றதல்லவா? அதையொட்டி சுதந்திரன் வாயிலாக இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் திமுக தலைவருமான கலைஞர் மு. கருணாநிதி தமது கைப்பட எழுதிய பின்வரும்செய்தியை அனுப்பிவைத்துள்ளார்-


அன்புடையீர் வணக்கம்,

ஈழத் தமிழர்களின் இதய வீட
மாடத்தில் விளங்கும் தந்தை
செல்வா அவர்களின் நினைவாகத்
[illegible] 'சுதந்திரன்'
சிறப்பிதழ் வெளியிடுகிறது என்று
செய்தி அறிந்தேன். ஈழத் தமிழகம்
உள்ளிட்ட உலகெங்கும் வாழுகின்ற
தமிழ்மக்களின் நல்வாழ்வு ஒன்றையே
எண்ணத்திற் கொண்டிருந்த
[illegible]. தந்தை செல்வாவின்
மறைவு எத்துணை இழப்பினை
அளித்தது என்பதைத் தாங்கள்
அறிவீர்கள்.
செல்வா, சென்றுவிட்டார் எனக் கருதத்
தேவையில்லை. அவர் தமிழர்களின் உள்ளத்
தில் நிலையாக நின்றுவிட்டார்
என்பதே உண்மையாகும்.
அவர் எண்ணம் ஈடேற,
தமிழ்ச்சமுதாயம் [illegible]
தொய்வின்றிப் பணிபுரியவே, நாம்
அவர்க்குச் செய்யும் நன்றிக்கடனாகும்.

அன்புள்ள,
மு. கருணாநிதி

திரு கோவைமகேசன்
சுதந்திரன்

ஈழத்தமிழர்கள் நடத்திவரும் உரிமைப்போருக்கு தந்தை செல்வா அவர்களே ஆதர்ஸ சக்தியாக அன்றும்இன்றும் என்றும் இருப்பார். தமிழரசுக்கட்சி பிறந்த நாள் தொட்டே நான்



அக்கட்சியினரோடு தொடர்பு கொண்டுவருகிறேன்; இனியும் இந்தத் தொடர்பு நீடிக்கும், நிலைக்கும்!"

இவ்வாறு தமிழ்நாடுசட்டமன்ற மேலவைத்தலைவரும் சிலம்புச் செல்வரும் தமிழரசுக்கழகத்தலைவருமான திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் சுதந்திரனுக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது:-

இலங்கைத் தமிழர்கள் தங்கள் "தந்தை" எனக் கருதிவந்த அமரர் செல்வநாயகம் அவர்களுடைய 80வது ஆண்டு நிறைவு விழாவையும், அவர் அமரத்துவம்பெற்ற முதல் ஆண்டு நினைவு தினத்தையும் இணைத்துக்கொண்டாடுவது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். அமரர் செல்வாவைப் பற்றிய நினைவு இலங்கைத்தமிழர்களுக்கு ஆற்றலைத்தருவதாகும். அவர்கள்நடத்திவரும் உரிமைப் போருக்கு எப்போதும் அவர்தான் ஆதர்ஸசக்தி.


அமரர் செல்வநாயகம் மறைந்து ஓராண்டானாலும் அவர் இன்னும் நம்மிடையே இருப்ப

## உரிமைப் போருக்கு தந்தை செல்வாவே என்றும் ஆதர்ஸ சக்தி!

### தலைவர் ம. பொ. சி. செய்தி!

தாகவே என்மனம் நினைக்கிறது. இலங்கைத்தமிழர் உரிமை வாழ்வுபெறும்வரை அவர் இறக்கமாட்டார். ஈழநாட்டுத் தமிழ்மக்களுக்கு எனது தமிழரசுக் கழகத்தின் ஆதரவு என்றும் உண்டு. இலங்கைத் தமிழரசுக்கட்சி பிறந்தநாள் தொட்டே அதனோடு நான் தொடர்புகொண்டு வருகிறேன். இனியும் இந்தத் தொடர்பு நீடிக்கும்; நிலைக்கும். அமரர் செல்வாபற்றிய நினைவு நிலைப்பதாக! இந்தியத் தமிழர்களின் சார்பில் அமரர் செல்வாவின் விழா வெற்றிபெற வாழ்த்துகிறேன்."

இவ்வாறு ம.பொ.சி. தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்



ராஜா,
கொக்குவில்.

கே: செந்தமிழர் இயக்க மாநாட்டுக்குப் போயிருந்தீர்களா?

ப: போகவில்லை. அதை விட வேறு முக்கிய வேலை எனக்கு இருந்தது. அதுசரி, நமக்குத் தெரியாத, நம் இயக்கத்தில் இல்லாத புதிய தத்துவம் எதையும் வி. பி. அங்கு கூறிவிடவில்லையே!

கே: தமிழர் விடுதலை அணிக்குள் இடதுசாரி,வலதுசாரி என்று கோஷ்டிப்பூசலை உருவாக்குபவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள் இப்படியான எந்தவித கோஷ்டிப்பூசலும் இல்லை; தமிழ்ஈழத்தன் விடுதலையை மீட்டு, அதை ஒரு சுதந்திர சமதர்ம நாடாக்குவதே கூட்டணியின் ஒரே இலட்சியம். அந்த இலட்சியத்தால் பின்னிப் பிணைக்கப்பட்டவர்களை பிரிக்க முயற்சிப்பவர்களை தலைவர்களும் தமிழ் சமுதாயமும் இனம்கண்டு எச்சரிக்கையாக இருந்திடவேண்டும். தமிழின ஒற்றுமைக் கோட்டையான தமிழர்விடுதலைக் கூட்டணியை எப்படியாவது சிதறடித்துவிட தெற்கிலும் வடக்கிலுமாக ஒரு சிலர் சதித்திட்டங்கள் தீட்டிவருவது எனக்குத் தெரியும்.

ஃ

இரா. ரவீந்திர நாதன்,
புங்குடுதீவு.

கே: இனக்கலவரத்தின் போது இங்கு ஓடி வந்தவர்கள், பின் மீண்டும் தென்னிலங்கைக்கு ஓடிச்சென்று அங்கிருந்து கொண்டு 'தனிநாடு' காண்போம் என்கிறார்களே! இவர்களைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: தங்களால் விடுதலைப் போராட்டம் தடைப்படக் கூடாது என்ற நல்ல உள்ளத்துடனேயே அவர்கள் அப்படிக் கூறுகிறார்கள். அதாவது நாம் சிங்கள நாட்டில் தற்காலிக தேவைகளுக்காக தற்காலிகமாக வாழ்ந்தாலும், எமக்காக 'தனிநாடு' போராட்டத்தை பின்போட்டு விடாதீர்கள் என்பதையே இப்படிக் கூறுகிறார்கள்!

கே: தனிநாடுக டு இத்தனை தமிழரையும் சாகடிக்கப் போகிறார்களா என்று கேட்பவர்களைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: தனிநாடு அமைந்துவிட்டால் எவரும் சாகடிக்கப்படமாட்டார்கள்; தனிநாடு இல்லாத காரணத்தினாலேதான் சிங்களவர்களால் தமிழர்கள் குரூரமாக சாகடிக்கப்படுகிறார்கள்— இதை அப்படிப்பட்டவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்!

ஃ

எஸ். ரி. பி. வரன்,
கே. கே. எஸ். வீதி,
வல்வை.

கே: தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களாலா அல்லது எதிர்க்கட்சித்தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களாலா தமிழ் ஈழத்துக்கு அதிகநன்மை?

ப: உங்கள் இரண்டு கண்களில் உங்களுக்கு எந்தக் கண்ணால் அதிக நன்மையென்று கூறுவீர்களா?

கே: எம். ஜி. ஆர், கருணாநிதி இருவரினதும் முகவரியை தருவீர்களா?

ப: இருவரும் முகவரி கடந்தவர்கள்— பெயருடன், சென்னை தமிழ்நாடு என்றாலே கடிதங்கள் அவர்களுக்குப் போய்ச் சேர்ந்துவிடும்!

ஃ

கே. கே. வி. நாதன்,
மிருசுவில்.

கே: 'அழிவுக்கு முன் அகந்தை' என்பதற்கு சிறு விளக்கம் தருவீர்களா?

ப: 1977 பொதுத்தேர்தலில் சிறிமாவுக்கு இலங்கையிலும் இந்திராவுக்கு இந்தியாவிலும் நடந்ததும்—1983 பொதுத்தேர்தலில் இங்கு ஐ. தே. கட்சிக்கும், அங்கு ஜனதாவுக்கும் நடக்கவிருப்பதும் சரியான விளக்கமாக இருக்கும்!

ஃ

ஆர். கே. பிள்ளை,
சித்தன்கேணி.

கே: 2-4-78 சுதந்திரனில் வெளியான செல்வா பிறந்தநாள் கவிதையில், 'மார்ச்' என்ற ஆங்கிலப்பதம் சேர்க்கப்பட்டிருந்ததேனோ?

ப: தந்தை செல்வா பிறந்த ஆங்கில மாதத்திகதி 31. அந்த ஆங்கிலத்திகதியை குறிப்பிடும்போது ஆங்கில மாதத்தையும் குறிப்பிடுவது தானே முறை?

ஃ

தமிழீழச் செல்வி யோகேஷ்,
பொன்பதி,
உடுப்பிட்டி.

கே: யாழ் வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்ற தந்தை செல்வாவின் பிறந்த நாள் கூட்டத்தில், தமிழ் மக்கள் தந்தையை மறந்துவிட்டதாகமுன்னாள் மூதவை உறுப்பினர் திரு. சு. நடராசா கூறியதுபற்றி உங்கள் கருத்து என்ன?

ப: மக்கள் பெருமளவில் கூடவில்லையே என்று மனமொடிந்த நிலையில் திரு. நடராசா வேதனையில் அவ்விதம் குறிப்பிட்டாரே தவிர —தமிழ் மக்கள் தந்தைசெல்வாவை மறந்துவிடவில்லை. குறித்த கூட்டத்துக்கு போதியளவு விளம்பரம் செய்யப்படாததால் கூட்டம் நடைபெறுவதை மக்கள் அறிந்துகொள்ளவில்லை. இது கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களின் பிழை; மக்களுடையதல்ல!

ஃ

மு. சுரேந்திரன்,
தலைவர், தேசிய உயர்தர மாணவமன்றம்,
மானிப்பாய் இந்துக்கல்லூரி,

கே: மும்மொழித் திட்டம் மீண்டும் நடைமுறைப் படுத்தப்பட்டால், அதை எவ்வாறு முறியடிப்பது என கூட்டணி முடிவுசெய்துவிட்டதா?

ப: கூட்டணி முடிவு எப்படியிருந்தாலும் — ஆதிக்க சிங்களம் திணிக்கப்படுவதை எதிர்த்து உங்களைப்போன்ற மாணவக்கண்மணிகள் நிச்சயம் களம் அமைப்பீர்கள் என்ற அந்த நம்பிக்கை எனக்கு மெத்தவுண்டு!

கே: எமது தலைவர்கள் முழுநேர ஊழியர்களாக இயங்கப்போவதாக சத்தியம் செய்தார்களே, அப்படி இயங்குகிறார்களா?

ப: சிலர் இயங்குகிறார்கள்; அனைவரும் இயக்கத்தின்முழுநேர ஊழியர்களாக இயங்கவேண்டிய அவசியம் வந்து கொண்டிருக்கிறது— பகுதிநேர அரசியல்வாதிகள் ஒரு சாதாரண அரசியல் கட்சியில் இருக்கலாம்; ஆனால் ஒரு விடுதலை இயக்கத்தில் ஊழியம் செய்பவர்கள் முழுநேர ஊழியர்களாக இயங்கினால்தான் அந்த இயக்கத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றமுடியும்.

ஃ

கே. சசிகரன்,
தெல்லிப்பளை.

கே: தமிழினத்தின் விடுதலைக்காக போராடும்தாங்கள் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளுக்கு மாலை போடும் சில போலித் தமிழர்கட்கு கூறும் புத்திமதி என்ன?

ப: நீங்கள் போட்டமாலை வாடு முன்னரே உங்களை சிங்கள வெறியர்கள் அடித்து விரட்டும் காலம் இது! மாலை போட்டாலும், காலைக்கழுவினாலும் தமிழர்களுக்கு உதை [illegible] யும் வெட்டி எறிவார்கள் சிங்கள வெறியர்கள்!

ஃ

க. தாமரா
இல: 21 வீட்டுத்திட்டம்
கற்பிட்டி.

கே: பெயரளவில் 1948 பெப்ரவரி 4ல் ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளின்றும் தமிழினத்திற்கு சுதந்திரம் கிடைத்து விட்டது. ஆனால் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளின்றும் தமிழினத்திற்கு எப்போ சுதந்திரம் கிடைக்கப் போகிறது?

ப: தமிழ் ஈழத்தின் விடுதலை நிலைநாட்டப்படும் போது!

கே: தமிழினம் நாய் போல் அலைந்து திரிவதற்கு சில காரணங்கள் கூறுவீர்களா?

ப: ஒற்றுமையீனம் கடைந்தெடுத்த சுயநலம், சமுதாய ரீதியாக சேர்ந்து சிந்திக்கும் மனப்பான்மை இல்லாமை, சாதி வேறுபாடு அளவுக்கு மிஞ்சிய பெருந்தன்மை, இத்தியாதி-இத்தியாதி...!

ஃ

இ. ஜெகா,
உசன்,
மிருசுவில்.

கே: 1972 தொடக்கம் ஏன் தனிநாடு தேவை என்பதற்குக் காரணங்களைக்கூறி 1977ல் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டபின், தனிநாட்டை அமைக்க முயற்சி செய்யாமல்இப்போதும் "ஏன் தனிநாடு தேவை" என்பதற்குக் காரணங்கள் கூறிக்கொண்டிருக்கிறார்களே தலைவர்கள். இது அவசியமற்றதல்வா?

ப: தனிநாடு ஏன் நமக்குத் தேவையென்பது குறித்து 1977 ஆகஸ்ட்கலவரத்தின் போது சிங்களவர்களே தமது செயல் மூலம் விளக்கமளித்துவிட்டார்கள், நம் தலைவர்கள் இப்போது தமிழ்மக்களுக்கு அல்ல,வெளிநாடடுத் தலைவர்களுக்குத் தான் தனிநாடு ஏன் கோருகிறோம் என்பதையிட்டு விளக்கம் அளித்து அவர்களது ஆதரவைக்கோரி வருகின்றனர்.

ஃ

"மங்களம்"
வெளிக்குளம்,
வவுனியா.

கே: நாம்அறியவேண்டிய விடயங்களைத் தரும்ஒரே பத்திரிகை என்ற காரணத்தால் சுதந்திரனை ஒவ்வொரு தமிழனும், தமிழச்சியும் வாசிப்பது மாத்திரமல்லாது, சொந்தமாக வாங்கி வாசிப்பது மிக மிக அவசியம். இந்த நோக்கில், சுதந்திரன் விற்பனையில் நீங்கள் திருப்தியடைந்துள்ளீர்களா?

ப: ஒரு பத்திரிகை எத்தனை பிரதிகள் விற்பனையாகின்றன என்பதை விட எவ்வளவு பேரால் படிக்கப்படுகிறது என்பதே முக்கியம்; சுதந்திரனின் கருத்துக்கள். தமிழ் மக்களிடையே சிந்தனைப் புரட்சியைத் தூண்டிவிடுகின்றன என்பது மட்டும் நமக்குத்தெரியும். விற்பனையைவிட அதுவே நமது குறிக்கோள்! சிங்களவர்கள் தேசிய உணர்வுடன் நாளும் ஒரு சிங்களப்பத்திரிகையை வாங்குவதுபோல- தமிழர்களும் ஒரு தமிழ்ப்பத்திரிகையை வாங்க வேண்டும் என்று இயக்க ரீதியாக பிரசாரம் செய்யப்படுவது அவசியம்!

ஃ

சே. வசந்தன்,
ஆவரங்கால் பஜார்,
புத்தூர்.

கே: பொது மேடைகளில் பேசும் அரசியல் வாதிகளையும் தன்னலம் கருதும் சுயநல வாதிகளையும் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப: அரசியல் வாதிகளுக்குள்ளும் சுயநல வாதிகளே ஏராளமாக இருக்கின்றனர்!

ஃ

இராஜா,
வான்றாயன் வீதி,
கொட்டாஞ்சேனை.

கே: வீரகேசரி மூலம் தனக்கு மாவட்ட மந்தி(ரி)ப் பதவி விருப்பமில்லை யென்றும் இருந்தாலும் நீதியமைச்சர் தேவநாயகத்துக்காக அதை ஏற்றுக்கொள்ளப் போகிறேன் என்றும் பொத்துவில் கனகர் கூறியிருக்கின்றாரே அதைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: மோருக்கு போகும் போது முட்டி பிறகாலை" என்ற பழமொழிதான் என் நினைவுக்கு வருகிறது!

ஃ

எஸ்,ஜி; ஆனந்தன்,
தெல்லிப்பளை.

கே: அமிர்தலிங்கம் பேரவையில் நிகழ்த்தும் உரையின் தமிழாக்கத்தினை சுதந்திரனில் பிரசுரிப்பீர்களா?

ப: அவ்வப்போது பிரசுரித்துக்கொண்டு தானே வருகிறோம். நீங்கள் சுதந்திரன் ஒழுங்காகப்படிப்பதில்லை என்பது இதிலிருந்து தெரிகிறது!

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,

இப்பொழுது
விற்பனையாகிறது!

## மெழுகுவர்த்தி

அமரர் டாக்டர் நாகநாதனின்
வாழ்க்கை வரலாறு

நூலாசிரியர்: கரிகாலன்
சிலம்புச்செல்வர் ம.பொ.சி.யின்
மதிப்புரையுடன்

கிடைக்குமிடம்:- சுதந்திரன் அலுவலகம்,238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். மற்றும் எல்லா சுதந்திரன் ஏஜண்டுகளிடமும்.

சன்சயின்
சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
-இது ஓர் லாலா தயாரிப்பு-
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ● இந்திய விடுதலைப் போரில் ஒரு கட்டம்:

# ரௌலட் சட்ட மறுப்பும் வாலாபாக் படுகொலையும்!

**1919 ஆம் ஆண்டு, இந்தியாவின் விடுதலைப் போர் வரலாற்றில் ஒரு திருப்பு மையமாகும். அந்த ஆண்டில்தான் புனிதர்காந்தி விடுதலைப் போரின் தளபதி பொறுப்பை நேரடியாக ஏற்ருர். ஆம்; தேசத்தின் தலைமை மாறியது 1919ல்.**

**சட்டத்திற்குட்பட்ட வழிகளிலேயே நாட்டிற்கு விடுதலை தேடிவிட முடியுமென்ற நம்பிக்கையை இழந்து.சட்ட மறுப்பு — சத்தியாக்கிரகம் ஆகிய போர் முறைகளில் காங்கிரஸ் ஈடுபட்டது 1919 இல் தான்!**

**இந்தியப்பெரு நாட்டில் காநதியடிகள் முதன் முதலாகக் கைது செய்யப்பட்டதும் 1919ல் தான்!**

**அதே ஆண்டில்தான் தான் கொடுமைமிக்க ஜாலியன் வாலாபாக் படுகொலையை நிகழ்த்தியது பிரிட்டிஷ் ஆட்சி.**

இவ்வளவுக்கும் காரணமாக அமைந்தது, 1919ல் பிரிட்டிஷ் ஆட்சி அமுலுக்குக்கொண்டு வந்த ரௌலட் சட்டமாகும்.

1919ல் சர். சிட்னி ரௌலட் என்ற ஆங்கிலேயர் தலைமையில் ஒருகமிஷன் நியமித்தது பிரிட்டிஷ் ஆட்சி, திரு. குமாரசாமி சாஸ்திரி என்ற சென்னை வாசியான தமிழர் ஒருவரும் அந்தக்கமிஷனில் இருந்தார்.

இந்தக் கமிஷன், நாட்டின் விடுதலைக்காக நடந்து வரும் புரட்சிச் செயல்களை, சதிக் குற்றங்களை ஒடுக்குவதற்காக வழிவகை கூறுவதற்கென அமைக்கப்பட்டது.

ரௌலட்கமிஷன்,19.1.19 இல் தனது பரிந்துரையை வழங்கியது. அதன்படி "ரௌலட் மசோதா" ஒன்றைத்தயாரித்து. அதனை இந்திய சட்ட சபையில் சமர்ப்பித்தது மத்திய அரசு;

இந்த மசோதா சட்டமானுல், தேசபக்தர்கள் வேட்டையாடப்படுவர்; பேச்சுரிமை,—எழுத்துரிமை அழிக்கப்படும்; விடுதலை இயக்கம் ஒடுக்கப்படும்; நாட்டின் அடிமைத்தனம் நீடிக்கப்படும்—என்று காந்தியடிகள் கருதினுர்.

ஆகவே. ரௌலட் மசோதாவை வாபஸ் பெறுமாறு இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். அது பயன்படவில்லை.

மசோதா விவாதிக்கப்பட்ட நாளிலே காந்தியடிகள் இந்திய சட்டசபைக்குச் சென்று அங்கு, பார்வையாளர் காலரியில் அமர்ந்து நடவடிக்கைகளைக் கவனித்தார். அடிகள் தம் வாழ் நாளில் இந்திய சட்ட மன்றத்திற்குள் அன்றுதான் சென்ருர். அதுவே கடைசியாகி விட்டது. "சட்டசபை இருக்கும் பக்கம் கூட நான் தலை வைத்துப்படுக்க மாட்டேன்" என்று சூளுரைத்துக் கொண்டார்.

காந்தியடிகள் சட்ட மன்றத்தில பார்வையாளர் காலரியிலிருந்த போது, தமிழ் நாட்டுப்பேரறிஞரான மகாகனம் சாஸ்திரியார், ரௌலட்மசோதாவை எதிர்த்து ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்தார். சபைக்குத் தலைமை வகித்த வைஸிராய், கண்ணிமைக்காது, மிகுந்த கவனத்துடன் சாஸ்திரியாரின் உணர்ச்சி மிக்க பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தார்:

இறுதியில், ரௌலட் மசோதா சட்டமாக்கப்பட்டது. இதனை "கறுப்புச் சட்டம்" என்று அழைத்தார், காந்தியடிகள். இந்தச் சட்டம் கடத்தல்காரர்களை, வரி ஏய்ப்பாளர்களை, கலப்படக்காரர்களை, கொள்ளை லாபக்காரர்களைத் தீண்டவில்லை. தேசபக்தர்களை அழித்தொழிக்கத் தான் பிறந்தது. ரௌலட் மசோதாவைக் கொண்டு வந்தது, மக்கள் ஆட்சி அல்ல; பிரதேசிகளின் ஆதிக்கம்! மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்து அதனைச் சட்டமாக்கியவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர்; பிரிட்டிஷ் ஆதிக்கத்தால் நியமனம் பெற்றவர்கள்.இந்தச் சூழ்நிலையில் பிறப்பித்த ஒருசடடம் என்பதால்தான் அதனை "கறுப்புச் சட்டம்'. என்ருர், காந்தியடிகள்.

ரௌலட் சட்டத்தை எதிர்த்துப் போராட முடிவெடுத்தார். அடிகள் அதற்குப் பொது மக்களின் ஆதரவைத் திரட்ட நாடு முழுவதும் சுற்றுலாச் சென்ருர், முடிவில் தென்னகம் வந்தார் சென்னைக்கும் வந்தார். இங்கு தங்கியிருந்தபோது தான் ரௌலட் சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகப் போர் தொடங்க அவரது உள்மனம் உத்தர விட்டது!

1919 மார்ச்சு 30 ஆம் தேதியன்று நாடு முழுவதிலும் ரௌலட் சட்டத்தை எதிர்த்து கடையடைப்பும் வேலை நிறுத்தமும் செய்யுமாறும் அரசால் தடைசெய்யப்பட்டுள்ள நூல்களை விற்குமாறும், உப்பு சட்டத்தை உடைத்தெறியுமாறும் தேச மக்களுக்கு ஐயன் ஆணையிட்

### ம.பொ. சிவஞானம்

டார். பின்னர், ஏப்ரல் 6ம் தேதிக்கு மாற்றினுர்.

தேதி மாற்றச் செய்தி டில்லிக்கு தாமதமாகக் கிடைத்ததால், மார்ச்சு 30லேயே டில்லியில் கடையடைப்பும் வேலை நிறுத்தமும் வெற்றிகரமாக நடந்தன. டில்லிவாழ் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒரு மதமாயினர், அக்கீம் அஜ்மல்கான்தான் டில்லியின் சட்டம் — சர்க்கார் என்ற நிலையில் டில்லி மாநகரில் அவரது ஆணை அமுல் நடந்தது.

சுவாமி சிரத்தானந்தர் என்ற இந்து சந்நியாசி, டில்லிஜும்மா.மசூதியில்பேச அழைக்கப்பட்டு, அவரும் அங்கு சென்று இஸ்லாமிய சகோதரர்களுக்கு, ரௌலட் சட்ட எதிர்ப்பில் ஈடுபடுமாறு பேசினுர்.

டில்லியில் தடையை மீறி ரௌலட் சட்ட எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது. பொலீசர்தடுத்தனர்; தடை தகர்க்கப்பட்டது ஜனவெள்ளத்தால்! துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர் பொலீசார். 4 முஸ்லிம்களும் இந்துக்களும் மாண்டனர். பலர் காயமடைந்தனர். இதற்குப் பின்னரும் 40 ஆயிரம் மக்களடங்கிய பொதுக்கூட்டத்தில் ரௌலட் சட்டம் தீக்கிரையாக்கப்பட்டது!

சென்னையிலும் ஏப்ரல் 6ல் ரௌலட் சட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நகர் முழுவதும் கடைகள் அடைக்கப்பட்டன.கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி., அன்னிபெசன்ட், திரு. வி.க., ஏ. ரங்கசாமி ஐயங்கார் ஆகியோர் கடற்கரையில்நடந்த பொதுக்கூட்டத்தில் பேசினர். சென்னையில் எல்லாம் அமைதியாக நடந்தன,

பம்பாயில் தடையை மீறி [illegible] ஊர்வலம், பொதுக்கூட்டத்தையும் நடத்தினுர் அடிகள். "இந்திய சுயராஜ்ய", "சர்வோதயம்" என்னும் தடை செய்யப்பட்ட நூல்கள் விற்கப்பட்டன.

பம்பாயில் ஏப்ரல்6ல்தான் அர்த்தால் நடைபெற்றது. அது முடிந்ததும், பஞ்சாப் மாநிலத்தவரின் அழைப்பை ஏற்று காந்தியடிகள் லாகூர் செல்ல ஏப்ரல் 7ஆம் தேதி இரவு பம்பாயில் ரயிலேறினுர். மறுநாள் காலை ரயில் பால்வால் ஸ்டேஷனை அடைந்தபோது, பஞ்சாபிற்குள் நுழையக்கூடாதென்று அடிகளுக்குத் தடையுத்தரவு வழங்கப்பட்டது. அடிகள் தடையை மீறிபயணத்தைத் தொடர்ந்ததால்,கைதுசெய்யப்பட்டு பம்பாய்க்குத் திருப்பி அனுப்பப்பட்டார். அங்கு அவர் விடுதலை செய்யப்பட்டார். ஆயினும் அடிகள் கைதியான செய்தி பம்பாய் நகரமெங்கும் பரவியதால், அந்நகரமே ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர்க்களமானது. சட்டம் தூள் தூளானது. வெறிபிடித்த மக்கள் ஆயிரம் ஆயிரமாகக் கூடி, ரௌலட்சட்ட எதிர்ப்புக் கோஷம் கொடுத்து, "காந்திக்கு ஜே" என ஆரவாரித்து நகர வீதிகளிலே பவனி சென்றனர். "வந்தே மாதரம்", "அல்லாஹு அக்பர்" என்றும் கோஷித்தனர்.

விடுதலை அடைந்த அடிகள் வெறி பிடித்து உலா வரும் மக்களிடம் சென்று அமைதியாகக் கலைந்து செல்லுமாறு "ஆணை"யிட்டார். ஆணைக்கு அடங்கினர் அன்பு வடிவினரான மக்கள்.

ஏப்ரல் 6ந் தேதி ஒரு நாள் மட்டுமே ரௌலட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது தான் அடிகளாரின் முடிவு, ஆனுல், அரசு மேற்கொண்ட அடக்கு முறையானது மக்களைத் தொடர்ந்த போராட்டத்தில் ஈடுபடுத்தி விட்டது. ஏப்ரல் 6க்குப் பின்னரும் நாட்டின் பல பகுதிகளில் பார்த்தால்—வேலை நிறுத்தம்,தடையைமீறிஊர்வலம், பொதுக் கூட்டம் ஆகியவை தொடர்ந்து நடைபெற்றன.

13ந் தேதி பஞ்சாப் மாநிலத்து தலைநகரான லாகூரிலும், மற்ருெரு நகரான அமிர்தசரசிலும் ரௌலட் சட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வலுத்தன. அமிர்தசரசில் அமைதியான ஊர்வலத்தை நடத்திச் சென்ற டாக்டர் சத்தியபால், டாக்டர் கிச்சிலு ஆகியோரைப் போலீசார் கைது செய்து அழைத்துச் சென்றனர். இதனுல் கலகம் மூண்டது. அதிகாரிகள் தாக்கப்பட்டனர். அரசு அலுவலகங்கள் நொறுக்கப்பட்டன. இதன் விளைவாக இராணுவச் சட்டம் அமுலுக்கு வந்தது.

ஏப்ரல் 13ந் தேதி மாலை 4-30 மணிக்கு அமிர்தசரசில் ஜாலியன் வாலாபாக் தோட்டத்தில் ஒருபொதுக்கூட்டம் நடை பெற்றது. தோட்டத்திற்குள் நுழைவதற்கு ஒரு வழிதான் இருந்தது. அந்த வழியில் பல்லாயிரக்கணக்கானவர் சென்றுபொதுக்கூட்டமாக சங்கமமாயினர். ஏப்ரல் 10ஆம் தேதியன்று ஆவேசங் கொண்ட கூட்டமொன்று திருமதி. ஷேர்வுட் என்ற பெண்கள் பள்ளி தலைமை யாசிரியரான வெள்ளைப் பெண்மணியைத் தாக்கியது. இதனுல் ஆங்கில அதிகார வர்க்கம் இந்தியர்களைப் பழிவாங்க முயன்றது. பிரிகேடியர் ஜெனரல் ரெஜினுலட் ஆரிஸ்டயர் என்னும்ராணுவ அதிகாரி துப்பாக்கி தாங்கிய ராணுவ வீரர்களுடன் ஜாலியன் வாலாபாக் தோட்டத்திற்குள் நுழைந்தார், அப்போது பொதுக் கூட்டத்தில் இருபத்தைந்தாயிரம் பேர் இருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆம்; நிராயுதபாணிகளான மக்கள் எவ்விதப் பாதுகாப்புமில்லாதநிலையில் இருந்தார்கள். திடீரென அவர்கள் பீரங்கி முழக்கத்தைக் கேட்டனர், அடுத்தடுத்து முழங்கியது பீரங்கியின் பேய்வாய். பலமுறை சுட்டான் பாவிடயர். தலைதெறிக்க ஓடினர் மக்கள். ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் கோவென்று கூவி, ஐயய்யோ என்று அலறி, காப்பாரில்லையா என்று கதறி எட்டுத்திக்கிலுமாக ஓட முயன்றனர், முடியவில்லை. அந்தத் தோட்டத்திற்கு ஒரு திசையில்தானே வழியிருந்தது. அந்த வழியில் தானே டயர் வடிவில் எமன் வந்து நிற்கிருன், மக்கள் எப்படி ஒடுவது? எங்கே ஓடிப் பிழைப்பது? பத்து நிமிடங்கள் வரை ஓயாமல் 1550 தோட்டாக்களை நிரபராதிகளான மக்கள் மீது பொழிந்தான் ஜெனரல் டயர்.

இந்தக் கொடுமையால் உயிரிழந்ததவர் எண்ணிக்கை 379. குண்டுக்காயம் பட்டவர்கள் 1337பேர்.

மைதானத்திற்குள் யாரும் நுழைய அனுமதிக்கப்படவில்லை. அதனுல் படுகாயமடைந்தவர்கள் இரவெல்லாம் அந்த ஜாலியன் வாலாபாக்திடலிலே கிடந்து சிகிச்சையற்று அவதியுற்றனர். அவர்களில் சிலர் உயிர் துறந்தனர்!

இதன்பின் அமிர்தசரஸ் நகருல் இராணுவ ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டது. மக்கள்,வீதிகளில் மார்பால் ஊர்ந்து செல்லும்படி வெள்ளை இராணுவத்தாரால் கட்டாயப்படுத்தப்பட்டனர். தேசபக்த பஞ்சாபியர்களிலே298 பேர்மீது குற்றம் சாட்டப்பட்டு அவர்களில் 217 பேருக்கு இராணுவக்கோட்டில் தண்டனை விதிக்கப்பட்டது அவர்களில்51பேருக்கு மரண தண்டனை.46பேர் நாடுகடத்தப்பட்டனர். மற்றும் பலருக்கு பலவிதமான தண்டனைகள்! பல நாட்கள் அமிர்த

—6-ம் பக்கம் பார்க்க

சன்சோனி ஆணைக்குழு முன்
தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகம்—
1977 ஆவணியில் தீவடங்கிலும்
நடைபெற்ற நிகழ்வுகளின் தொகுப்பு
ஆவணி அமளி-1
தமிழ்த் தொகுப்பு — க, சச்சிதானந்தன்
கொழும்பில் கிடைக்கும் இடம்;
இராஜேஸ்வரி பவான்—
(கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்)
இரத்தின ஸ்ரோர்ஸ் — (கும்பனித் தெரு)
கிறீலன்ட்ஸ் ஓட்டல் — (பம்பலப்பிட்டி)
விலை 3-00 வி.பி.பி, உண்டு. வியாபாரிகட்குக் கழிவு;
ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை
213, காங்கேயன்துறை வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி :256

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தலைவர்களுக்கே தடுமாற்றம் வரலாமா?

நமது தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியம்—நோக்கம்— குறிக்கோள் — தெளிவானது; திட்டவட்டமானது சுதந்திரத் தமிழ் ஈழ அரசொன்றை சமதர்மப் பாதையில் மீள அமைப்பதே நமது ஒரேயொரு புனித இலட்சியம், 1976 வட்டுக்கோட்டை மாநாட்டில் எடுக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவும் இதுதான்; 1977 பொதுத் தேர்தல்ல் தமிழ் தேசிய இனத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையும் இதுதான்! இது ஒன்றைத்தவிர—வேறு எதுவும் நமது நோக்கம் அல்ல!

இரண்டு தேசிய இனங்களை — இரண்டு வெவ்வேறு நாடுகளை கொண்டதே இலங்கைத்தீவு; இலங்கை என்பது ஒரே நாடல்ல; தமிழ் ஈழத்தேசத்தை, சிங்கள சிறீலங்கா தனது குடியேற்ற நாடாக — காலனியாக மாற்றி தனது படைப்பலத்தை பிரயோகித்து சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வைத்துக் கொண்டிருக்கிறது, சிங்கள சிறீலங்காவின் இந்த ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ் ஈழநாட்டை விடுவித்து அதன் சுதந்திரத்தையும், இறைமையையும் மீட்க வேண்டும் என்ற புனிதமான எண்ணங்களை சுமந்துகொண்டு விடுதலை யாத்திரையிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம்!

தமிழ் மக்கள் மறந்திருந்த வரலாறுகளை அவர்களுக்கு நினைவூட்டி — அவர்கள் மனதில் தவருக படிந்திருந்த எண்ணங்களை மாற்றியமைத்து—படித்தவற்றை மறக்க வைத்து—படிக்க மறந்தவற்றை படிக்கவைத்து—தமிழ் மக்களின் நெஞ்சங்களில் புத்தெழுச்சியை ஊட்டி வருகிறோம்!

நாம் ஒரு 'சிறுபான்மை' இனமல்ல—நாம் ஒரு தனி நாட்டினம்.

இலங்கை ஒரு நாடல்ல — இரண்டு தனித்தனி நாடுகளைக் கொண்ட ஒரு தீவு!

என்கிற அடிப்படை வரலாற்று உணர்வுகளை தமிழ் மக்களிடையே ஏற்படுத்தி—அந்த உணர்வின் அடிப்படையில் சுதந்திர இயக்கத்தை முன்னெடுத்துச் செல்கிறோம்!

ஆனுல் இந்த வரலாற்று உணர்வுகளை நமது மக்களின் இதயங்களிலே ஆழமாகப்பதித்திடும் பணியில் ஈடுபடவேண்டிய நமது தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களிலே பலர், பழக்கதோஷத்தினுலோ என்னவோ தமிழ் மக்களை 'சிறுபான்மையினர்' என்றும் தமிழ் இனத்தின் பிரச்சினையை 'சிறுபான்மை பிரச்சினை' என்றும் இன்னும் கூட குறிப்பிடுவது உண்மையிலேயே வேதனை தருவதாகும்! தாம் ஒரு 'சிறுபான்மை இனம்' என்ற தாழ்வு மனப்பான்மைக்குள் சிக்கித்தடுமாறும் தமிழ் மக்களின் மனமயக்கத்தைப் போக்கி, 'நாம் ஒரு சிறுபான்மை இனம் அல்ல — நாம் தனியொரு நாட்டினம்; தனித்தேசிய இனம்'' என்று எடுத்துக்கூறவேண்டியவர்களே அதிலிருந்து தெரிந்தோ தெரியாமலோ, தடுமாறுவது உண்மையிலேயே கண்டிக்கப்பட வேண்டியதாகும். அதுமட்டுமன்றி கூட்டணி ஏற்றுக்கொண்டிருக்கும் அரசியல் தத்துவத்துக்கு மாறுபட்டதுமாகும்!

நமது கூட்டணி பா.உ.க்கள் பேசியுள்ளதாக நாளேடுகளில் வெளிவரும் சில பேச்சுக்களைப் படிக்கும் போது, கூட்டணியின் தலைமைப்பீடம் இவர்களுக்கே முதலில் அரசியல் பாடம் புகட்டிட வேண்டும் போலத் தோன்றுகிறது.

ஒரு பா.உ, "இந்த நாட்டு மக்களிடையே தேசிய ஒருமைப்பாடு இருக்க வேண்டும் எனறும் இதற்கான வழிவகைகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்றும்'' ஒரு நிகழ்ச்சியில் பேசியிருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்திருந்தது.

இலங்கை மக்கள் ஒரே தேசியத்தை சார்ந்தவர்கள் அல்ல; இரண்டு வெவ்வேறு தேசியங்களை—தேசங்களை சார்ந்தவர்கள்; ஒரே தேசியத்தை கொண்டொழுகும் மக்களிடையே தான் "தேசிய ஒருமைப்பாட்டை'' ஏற்படுத்தலாமே தவிர—மாறுபட்ட வேறுபட்ட இரு தேசங்களிடையே ''தேசிய ஒற்றுமையை'' ஒருபோதும் ஏற்படுத்த முடியாது. உதாரணமாக இந்தியாவுக்கும் சிங்கப்பூருக்கு மிடையே வேண்டுமானுல் நல்லுறவு இருக்கலாமே தவிர—'தேசிய ஒருமைப்பாடு' ஏற்பட முடியாது' அது போலவே 'தமிழ் ஈழம்' சுதந்திரம் பெற்ற பின்னர் வேண்டுமானுல் சிங்கள சிறீலங்காவுக்கும், தமிழ் ஈழத்துக்கும் நல்லெண்ணமும் நட்புறவும் ஏற்படலாமே தவிர இரு தேசங்களுக்குமிடையே "தேசிய ஒருமைப்பாடு" ஏற்படுத்த முடியாது! இந்த உண்மையை நன்ருக அலசி ஆராய்ந்திடாமல் நம்மவர்களும் "தேசிய ஒருமைப்பாடு" என்ற போலித்தனத்துக்குள் வீழ்ந்திடலாமா? தமிழ் சமுதாயத்தின் தெளிந்த சிந்தனையை மீண்டும் இப்படிப்பட்டபேச்சுக்கள் குழப்பிவிடக்கூடும்! இதிலே நம்மவர்கள் சர்வஜாக்கிரதையாக நாவசைத்திட வேண்டும்!

மற்ருேர் கூட்டணி பா.உ. ஒருவர் பின்வருமாறு ஒரு நிகழ்ச்சியில் பேசியிருந்ததாக நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது!

"கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் இந்த நாடு சுதந்திரமடைந்த போதிலும், நாம் பொருளாதார சுதந்திரத்தை இன்னும் அடையவில்லை. பொருளாதார சுதந்திரமில்லாத அரசியல் சுதந்திரத்தால் எதுவித பயனுமில்லை''

இதுதான் குறித்த கூட்டணி பா.உ. பேசியதாக பத்திரிகையில் வந்த பேச்சு. இதைப் படித்த போது, நமது பா.உக்கள் சிலர் நமது பிரச்சினையையிட்டு ஆழமாகச் சிந்திக்காமல் வெறும் மேலோட்டமாகவே பார்க்கிருர்களா என்கிற ஐயம் விடுதலைத் துடிப்புள்ள எந்தஇளைஞனுக்கும் ஏற்பட்டே தீரும்!

இந்த நாடு என்பது எந்த நாடு? நமது தமிழ்ஈழம் தானே நமது நாடு? தமிழ் ஈழம் எங்கே முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சுதந்திரம் அடைந்தது? அப்படி சுதந்திரம் அடைந்திருந்தால், இன்று நாம் சுதந்திரத்துக்காகப் போராடுகிறோமே, அது ஏன்? தமிழ் ஈழ நாடு ஆங்கிலேயன் அகன்ற பின்னரும் அரசியல் சுதந்திரமின்றி சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதால் தானே அதன் அரசியல் விடுதலைக்காக இன்றுபோராடுகிறோம்! இந்தப் புனித இலட்சியத்துக்காக—தமிழ் ஈழத்தின் அரசியல், பொருளாதார சமுதாய விடுதலையைக் காண்பதற்காகத் தானே தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற இயக்கமே உருவாகியது? இந்த உண்மைகளை தமிழ்மக்களின் நெஞ்சில் இருத்திட வேண்டிய கூட்டணிபா. உ. ஒருவர் மேற்கண்டவாறு பேசியிருக்கலாமா?

எந்த ஒரு பா. உ. மீதும் 'குற்றம்' கண்டுபிடிப்பது எமது நோக்கம் அல்ல; ஆனுல் அவர்களது வாயிலிருந்து விழும் ஒவ்வோர் சொற்களும் நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் இலட்சியத்துக்கு முரண்பாடின்றியும்—தமிழ் மக்களை மனக்குழப்பத்திலாழ்த்தாது இருக்கும் வகையிலும்—தமிழ் ஈழ விடுதலை இலட்சியத்துக்கு மேலும் உரமேற்றும் வகையிலும் எதிர்காலத்தில் அமைய வேண்டும் என்[illegible] இங்கு சுட்டிக் காட்டியுள்ளோம். தாயக விடுதலையொன்றே நம் நெஞ்சம் முழுவதிலும் நிறைந்து நிற்கட்டும்!

# "தமிழன் வீரத்தில் யாருக்கும் சளைத்தவனல்ல!"

"தமிழன் வீரத்தில் வேறு யாருக்கும் சளைத்தவன் அல்ல; வீரமும் காதலும் தமிழனது இரு கண்களாக விளங்கி வந்திருக்கின்றன. தமிழன் தனது நாட்டைத் தானே ஆண்டிருந்த போது வீர விளையாட்டுக்கள் பலவற்றிலும் ஈடுபட்டு உடலுறுதியும்' உள்ள உறுதியும் கொண்டவனுக விளங்கினுன் தமிழன் தன்னுடைய ஆட்சி இழந்த காரணத்தினுல், அடிமைச் சேற்றுள் சிக்கி வீரத்தை இழந்து விட்டான். பண்டைத் தமிழன் பெற்றிருந்த உணர்வுகளை இக்காலத் தமிழ்ப் பரம்பரை மறுபடியும் பெற்ருக வேண்டும்"

## புத்தாண்டுத் தின விழாவில் தமிழ்ஈழ முதல்வர் முழக்கம்!

இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற புத்தாண்டு விழாவில் கலந்துகொண்டு பேசிய தமிழ்ஈழ முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. குறிப்பிட்டார். அவர் மேலும் தமது உரையில் கூறியதாவது:-

'கடந்த ஆண்டுஎங்களுக்கு அடுத்தடுத்து காசபான அனுபவங்கள் பல ஏற்பட்டன. எமது தமிழ்த் தலைவர்களை ஒருவர் பின் ஒருவராக இழந்தோம், ஆகஸ்ட் கலவரத்தின்போது இடம் பெற்றகொலை, கொள்ளை கற்பழிப்புப்போன்ற வன் செயல்கள் எமக்குக் கடந்த 2500 ஆண்டுகளில் ஒருபோதும் கண்டும் கேட்டுமிராத புதிய அனுபவங்களைக்கொடுத்துள்ளது. ஆகவே நாம் அந்த ஆண்டை இலகுவில் மறந்துவிடமுடியாது. இப் புத்தாண்டு எமக்கு நன்மைகளையே விளைவிக்கும் என்பது எமது நம்பிக்கை.

### வீரப் பரம்பரை

விளையாட்டுக்கலையைத் தமிழன் ஒரு வெறும் விளையாட்டாகக் கொள்வதில்லை. ஆயகலைகள் 64ல் ஒன்ருகவே கருதிப் போற்றி வளர்த்து வருகிருன்; உடலுறுதி வீரம் யானை ஏற்றம், குதிரையோட்டம், கப்பல் ஓட்டுதல் வேல் வித்தை, வாள் வித்தை இவற்றையெல்லாம் தமிழன் வீரவிளையாட்டுக் கலையாகவே மதித்துப் போற்றி வளர்த்துவருகிருன். இப்படியான ஒரு வீரப்பரம்பரை தமிழ்ப்பரம்பரை. இந்த வீரப்பரம்பரை 1969ம் ஆண்டில் அந்நியர் ஆட்சி தலை தூக்கியதால் சிதைவுற்றது.

### எமது நாடு எமக்கு கிடைக்கவில்லை

போத்துக்கேயர் ஆண்டனர்;ஒல்லாந்தர் ஆண்டனர்; தொடர்ந்து ஆங்கிலேயர் ஆண்டனர். ஆங்கிலேயருக்குப் பின் எம்கையில் வர வேண்டிய எமது நாடு எமக்குக் கிடைக்காமல் போய் விட்டது. தொடர்ந்தும் எமக்கு அந்நிய ஆட்சிதான். எமது பொருளாதாரம், மொழி, மத, கலை, கலாச்சார உரிமைகளை இழந்து கடந்த 30 ஆண்டுகளாக வாழ்கிறோம். ஆனுல் தொடர்ந்தும் இப்படியேதான் வாழவேண்டுமென்ற நியதி எம் இனத்திற்கில்லை.

கிறிஸ்துவுக்கு முன் தமிழன் ஆண்டான். ராஜராஜ சோழன்,ராஜேந்திரசோழன் காலத்தில் இந்த நாட்டைத் தமிழன் 90 ஆண்டுகள் தொடர்ந்து ஆண்டுவந்திருக்கிருன். இந்தஉண்மையை சிங்கள சரித்திரமான மஹாவம்சமே உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் எஸ். ஆர். ஜெயசூரியா என்ற சிங்கள பேராசிரியர் தமிழர் வந்தேறுகுடிகளென்று ஒரு ஆங்கிலத் தினசரியில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அவரின் கட்டுரை வன்செயல்களுக்கு முகவுரையாக அமைந்துவிட்டது. அவர் தீட்டியவழி வகைகளையே கையாண்டு அந்தவழியிலேயே வன்செயல் அத்தியாயத்தை முடித்துக் கொண்டார்கள். நாம் வந்தேறு குடிகளல்ல, என்பதை எமது இளைய சமுதாயம் உணரவேண்டும். அப்படி அவர்கள் உணரத் தவறினுல், எமது இனம் சுதந்திர இனமாக வாழ முடியாது.

பௌத்தம் இலங்கைக்கு வர முன்பே தமிழன். திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முனீஸ்வரம் போன்ற ஈஸ்வரங்களை அமைத்து அதன் மத்தியிலே ஆண்டுவந்தவன் என்பதையும் எம் இளைய தலைமுறைகள் உணரவும், சுதந்திர தாபம் கொண்டு, எமது விடுதலைக்காக உழைக்கவும் வேண்டும் இதன் மூலமே தமிழன் வந்தேறுகுடியல்ல, கள்ளத்தோணி அல்ல என்பதையும் நிரூபிக்க முடியும்.

# கோப்பாய் மாநாட்டு வரவேற்புக் குழு!

கோப்பாய்த் தொகுதியில் ஆவரங்காலில் மே 12, 13, 14 திகதிகளில் நடைபெறவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டுக்கான வரவேற்புக்குழு அமைக்கப்பட்டு விட்டது. வரவேற்பு குழுவின் தலைவராக கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளையும், துணைத்தலைவராக திரு. வ, நடேசலிங்கமும், செயலாளராக திரு. ஆ.வேலுப்பிள்ளையும்,பொருளாளராக திரு. ச. லோகேஸ்வரனும் நியமிக்கப்பட்டுள்ளனர். செ. சபாரத்தினம், கே. நித்தியானந்தம், ந. திருஞான சம்பந்தர். இ. சிவபாதம், வே. சின்னத்தம்பி, ச. நவரத்தினம், பூ. இளையதம்பி, மு. சபாரத்தினம் ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

# வரவேற்புக் குழு செயலாளர் கோரிக்கை

கோப்பாய்த் தொகுதியில் மே 12, 13, 14,ம்திகதிகளில் நடைபெறவிருக்கும் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் கலந்து கொள்ள வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தரும் தொண்டர்கள், பிரதிநிதிகள் எத்தனை பேர் பங்குபற்றுவார்கள் என்பதை ஒவ்வொரு தொகுதிக்கிளைகளும் மூலக்கிளைகளும் கீழ்க்காணும் எனது முகவரிக்கு அறிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றன.

—க. சின்னத்துரை,
வரவேற்பு குழுச் செயலாளர்.
ஆவரங்கால், புத்தூர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வா நினைவுகூட்டங்கள் திட்டமிட்ட முறையில் நடைபெருமற்போனதேன்?

## கூட்டணியே இவற்றை பொறுப்பேற்றிருக்கவேண்டும்!

தமிழீழத்தந்தை மூதறிஞர் செல்வா அவர்கள் இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழனுடைய ரத்த அணு ஒவ்வொன்றிலும் இரண்டறக் கலந்துவிட்டிருப்பவர். தமிழனுடைய மூச்சாக, செயலாக, தமிழனுடைய ஆத்மீக ஒளியாக, தமிழ் ஈழத்தின் திசையறிகருவியாக, சுதந்திரச் சுடரொளியாக விளங்கிக் கொண்டிருப்பவர்.

400 ஆண்டு காலத்துக்குப் பினனர் தமிழ் ஈழ அன்னை தவமிருந்து பெற்றெடுத்த தவப் புதல்வர் அவர்; தமிழ் சமுதாயத்துக்கென வாராது வந்துதித்த ஒளி மாமணி அவர். அவரது உணர்வுகள் தமிழனை தலை நிமிர வைக்கின்றன. அவருடைய சிந்தனைகள் அடிமைத்தனத்தை எதிர்த்துப் போராடும் வலிமையை நமக்கு அளிக்கின்றன. தமிழன் ஒவ்வொருவனுடைய இதயமும் தந்தை செல்வா குடியிருக்கும்கோவிலாகவே விளங்குகிறது.

செல்வாவை நாம் நினைக்கிறோமென்ருல் —அவருக்கு நினைவுக் கூட்டங்கள் நடத்துகிறோமென்ருல்—அது அவருடைய நினைவு மக்களிடமிருந்து மறைந்து விடுமென்ற அச்சத்தினாலோ, அல்லது அவருக்கு அதனுல் ஏதோ சிறப்பு கிடைத்து விடுகிறது என்பதனுலோ அல்ல;

நமது பலவீனங்களை துடைத்துக் கொள்வதற்கு— நம்மை நாமே சுத்திகரித்துக் கொள்வதற்கு— நம்மை மேலும் உறுதியும் எழுச்சியும் பெற வைப்பதற்கு "செல்வா" எனும் திருநாமத்தை உச்சரிக்கிறோம்; நினைவுக் கூட்டங்களை நடத்துகிறோம்.

செல்வா எனும் திருநாமத்தை உச்சரிக்கும்போது வீரம் பிறக்கிறது; தன்மானம் தலை தூக்குகிறது: தைரியம் பிறக்கிறது; தமிழ் ஈழத்தை அமைத்தாக வேண்டும் என்கிற துடிப்பு பிறக்கிறது; எனவே தான் செல்வா எனும் திருநாமத்தை உச்சரிக்கிறோம்; செல்வா நினைவுக் கூட்டங்களை நடத்துகிறோம்.

ஆனுல் செல்வா நினைவுக் கூடடங்கள் யாழ்ப்பாணத்தில் எவ்வாறு நடத்தப்பட்டன என்பதை பார்க்கும் போது வேதனையும் வெய்துயிர்ப்பும் ஆத்திரமும் பொத்துக் கொண்டு வருகிறது. ஒரு பெருந்தலைவரின் நினைவாககூட்டங்களை முறையாக ஒழுங்குசெய்து நடத்த முடியாத நம்மால் வேறு எதைத்தான் செய்ய முடியும் என்ற வேதனை கலந்த கேள்வியும் கூடவே பிறக்கிறது.



தந்தை செல்வாவின் நினைவாலயத்தை தந்தைசெல்வா சதுக்கத்தில் கட்டி முடிப்பதற்கும், தந்தை செல்வா பற்றிய நூல்களை வெளியிடுவதற்கும், செல்வாபற்றிய ஆய்வரங்குகளை நடத்துவதற்கும் 'தந்தை செல்வா அறங்காவல் குழு' என்றோர் குழு அமைக்கப்பட்டு இயங்கிவருகிறது. இக் குழுவே தந்தை செல்வா நினைவுக் கூட்டங்களை மார்ச்31முதல் ஏப்ரல்26வரை நடத்தப்போவதாக அறிக்கை விடுத்தது;

இந்த அறங்காவல்குழு 19-3-78 சுதந்திரனில் வெளியிட்டிருந்த அறிக்கையின் படி 31-3-78 அன்று யாழ்ப்பாணத்திலும், திருக்கோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னுர், பொத்துவில் ஆகிய இடங்களிலும், மிகவும் விமரிசையாக தந்தையின் பிறந்தநாள் கூட்டங்கள் நடைபெறவிருப்பதாகவும், இதனை அவ்வப் பகுதி பா. உ.க்கள் முன்னின்று நடத்த விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் மார்ச்31 முதல் ஏப்ரல் 26வரைஉள்ள 27நாட்களும் தந்தை செல்வா நினைவு நாட்களாக கொண்டாடப்படுமென்றும் இந்நாட்களில் தமிழ் ஈழமெங்கும் செல்வா நினைவு நிகழ்ச்சிகள் நடைபெறுமென்றும் இந்த அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனுல் நடை முறையில்— போதிய விளம்பரமும் பிரசாரமுமின்றி—அரை குறையாக யாழ் வீரசிங்க மண்டபத்தில் 31-3-78ல் நடந்த ஒரேயொரு கூட்டத்தைத் தவிர வேறு எந்தக் கூட்டமும் வேறு எந்தஇடத்திலும் அன்றைய தினமோ அதன் பின்பு இன்றுவரையோ நடைபெறவில்லை யென்பது வேதனையும் வெட்கமும் கலந்த உண்மையாகும். இதற்கு யார் பொறுப்பு? செல்வா அறங்காவல் குழுவினர் வெறும் அறிக்கையுடன் திருப்தியடைந்து விட்டனரா? அல்லது அறங்காவல் குழுவினருடன், அந்தப்பகுதி கூட்டணிப் பா.உ.க்கள் ஒத்துழைக்க மறுத்துவிட்டனரா? அல்லது வேண்டா வெறுப்பாக அசட்டையாக இருந்து விட்டனரா என்பதை அறிய தமிழ் சமுதாயம் ஆவல் கொண்டுள்ளது.

31-3-78ல் திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னுர், பொத்துவில் ஆகிய இடங்களில் தந்தை செல்வா பிறந்த நாள் கூட்டங்கள் நடைபெருதது மட்டுமல்ல —அதற்கு பின் இற்றைவரை "அறங்காவல் குழு அறிக்கையில்" குறிப்பிட்டதுபோல— "தமிழ்ஈழமெங்கும் செல்வா நினைவு நிகழ்ச்சிகள்" எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லையே இது ஏன்? வெறும் அறிக்கையுடன் அறங்காவல் குழு திருப்தியடைந்து விட்டதா?

31-3-78ல் யாழ் வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்ற செல்வா நினைவுக்கூட்டத்தில் தந்தையின் ஒரு நிழல் படம் கூட மேடையில் வைக்கப்படாததை கூட்டத்துக்கு வருகைதந்திருந்த பலரும் பார்த்து மனம் உடைந்தனர்.

தந்தை செல்வா நினைவாலயக்கட்டட நிதி சேகரிப்பதிலும் யாழ்ப்பாணத்தில் மலையன் ட்ரேடிங் மணியம், நல்லூர்த் தொகுதியில் வண்ணை ஆனந்தன்— இப்படி ஒரு சிலரே மிக அதிகமாக பாடுபட்டு உழைத்ததாகவும் கேள்விப்படுகிறோம்.

யாழ்ப்பாண பா. உ. திரு. வெ. யோகேஸ்வரனிடம் சிபார்சு பெற்று 'கோட்டா' பெற்ற பெரும் வியாபாரி ஒருவர் "செல்வா நிதிக்கு' ஒரு ரூபா போட்டாராம்; இதைக் கேள்வியுற்ற யோகேஸ்வரன் பெரும் அதிர்ச்சியடைந்திருக்கிறாராம்;

இது இப்படியிருக்க நாம் கேடகவிரும்பும் கேள்விகள் இவைதாம்!

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவினர் தந்தையின் நினைவுத் தூணை கட்டி முடிக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளட்டும்!

ஆனுல் தந்தை செல்வா நினைவுக்கூட்டங்களை நடத்தும் முழுப்பொறுப்பும் அறங்காவல்குழுவினரிடம் ஏன் விடப்பட வேண்டும்? தந்தை செல்வா உருவாக்கிய இயக்கம் — தமிழர் விடுதலைக்கூட்டணி எங்கே போய்விட்டது? தந்தை உருவாக்கிய மைந்தர்கள் எங்கே போய் விட்டார்கள்? தமிழர் விடுதலைக் கூட்டணி கிளைகள் எங்கே போய்விட்டன?

தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் நினைவுக் கூட்டத்தை தானே முன்னின்று வெற்றிகரமாக யாழ்ப்பாணத்தில் நடத்திய தமிழர் விடுதலைக் கூட்டணியினரே நேரடியாக செல்வா நினைவுக் கூட்டங்களையும்ஆங்காங்கு தமிழ் ஈழம் முழுவதும் நடத்தியிருக்கலாமே! கூட்டணியே நேரடியாகக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தால் 31-3-78ல் நடைபெற்ற கூட்டம் அவ்வளவு தூரம் தொய்ந்து போயிருக்காதே! மக்கள் வெள்ளம் அலைமோதி முட்டி வழிந்திருக்குமே!

கூட்டங்கள் நடத்துவதில் அனுபவமும் ஆற்றலும் நிறைந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தந்தை செல்வா நினைவுக்கூட்டங்களை முறையாக ஒழுங்கு செய்து தமிழ் ஈழம் முழுவதும் நடத்தியிருந்தால் எத்துணை எழுச்சியை அது ஏற்படுத்தியிருக்கும்?

அறங்காவல் குழுவிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, தங்கள் தலைவனுக்கு தாமே விழா எடுக்காமல் கூட்டணி ஏன் இப்படி ஒதுங்கிக் கொண்டது என்பதே வேதனைமிக்க நமது கேள்வியாகும்.

இந்த மாசு துடைத்திட 26-4-78 புதன் கிழமையன்று மாலை தமிழர் விடுதலைக் கூட்டணியே முன்னின்று தந்தை செல்வாவின் முதலாவது ஆண்டு அஞ்சலிக் கூட்டங்களை தமிழ் ஈழம் முழுவதும் நடத்தும் என்று எதிர்பார்க்கிறோம்.

அண்ணுவின் நினைவு நாளை ஒவ்வோராண்டும் பேரெழுச்சியோடு திராவிட முன்னேற்றக்கழகம் கொண்டாடுவது போலவே — செல்வா நினைவுநாளை இந்நாட்டில், தமிழர் விடுதலைக் கூட்டணியே ஒவ்வோராண்டும் கொண்டாட வேண்டும். அறங்காவல் குழு தனது கடமையை நிறைவேற்றட்டும்!

## தந்தைக்கு அஞ்சலி செய்ய "செல்வா சதுக்கத்தில்" அணி திரள்வீர்!

தமிழீழத்தந்தை மூதறிஞர் செல்வா அவர்கள் அமரராகிய முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சிகள் 26-4-78 காலை 9மணிக்கு யாழ்நகரில் தந்தை செல்வாவின் பூதவுடல் எரியூட்டப்பட்ட "செல்வா சதுக்கத்தில்" நடைபெறுகிறது. கூட்டணியின் தலைவர்களும்மற்றும் இளைஞர்பேரவை உறுப்பினர்களும், தந்தைசெல்வா அறங்காவல் குழுவினரும் இதில் கலந்து கொள்வார்கள். தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவுகளை நடத்தவிருக்கும் காந்தி அமைதிநிலையத் தலைவர் திரு. ஆர். ஆர் திவாகரும் இதில் பங்குபற்றுவார். பெருந்திரளான தமிழ் பொதுமக்கள் இந்த அஞ்சலி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள யாழ்ப்பாணத்திலுள்ள செல்வா சதுக்கத்தில்" அன்று காலை திரளுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆர், ஆர், திவாகரின் தந்தை செல்வா நினைவு சொற்பொழிவுகள்

தந்தை செல்வா நினைவு சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்கு இங்கு 23-4-78ல் வருகை தரும் இந்தியாவைச் சேர்ந்த காந்தி அமைதி நிலையத் தலைவர் திரு. ஆர். ஆர். திவாகர் அவர்களின் நிகழ்ச்சிகள் வருமாறு!

24-4-78 — பிற்பகல் 6 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சொற்பொழிவு தலைமை: பேராசிரியர் கே. நேசையா,

25-4-78 — பிற்பகல் 6 மணி. யாழ். வீரசிங்க மண்டபத்தில் சொற்பொழிவு; தலைமை மு. சிவசிதம்பரம், பா.உ.

26-4-78 — காலை 9 மணி— செல்வா அஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்பு.

27-4-78— பிற்பகல்6மணி கொழும்பு ராமகிருஷ்ண மண்டபத்தில் சொற்பொழிவு; தலைமை திரு. அ. அமிர்தலிங்கம் பா.உ.

## மே தின அணிவகுப்பு

தமிழ் ஈழத் தொழிலாளர்களின் மாபெரும் மேதின அணிவகுப்பு மே நாளில் யாழ் நகரில் நடைபெறவுள்ளது.

தொழிலாளர் அணி, விவசாயிகள் அணி, இளைஞர் அணி, மகளிர் அணி, துவிச்சக்கர வண்டிகள் அணி, மாட்டு வண்டிகள் அணி, உழவுஇயந்திர அணி, மோட்டார்கார் லொறிகள் அணி, வர்த்தக ஊழியர் அணியெனப் பல அணிகள் இந்த மேதின அணிவகுப்பில் கலந்து கொள்ளும்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி-காரை நகர் கிழக்கு கிளை பொதுக்கூட்டம்

மேற்படி கிளையின் பொதுக்கூட்டம் 16-4-78 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு கிளை அலுவலகத்தில் தேசியப்பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. கிளைகளின் செயற்பாடுகள் பற்றியும், நடைமுறைகள் பற்றியும் கூட்ட ஆரம்பத்தில் தலைவர் எடுத்துரைத்தார். அடுத்து நடப்பு ஆண்டின் உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது. பின்வருவோர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்:— திரு: மு. பாலசிங்கம், உபதலைவர்:—திரு. சி. கனகசுந்தரம். செயலாளர்:—திரு. க. அமிர்தலிங்கம். உபசெயலாளர்:— திரு. க. குமரகுரு பொருளாளர்:—திரு. க. தம்பையா;

நிர்வாக சபை உறுப்பினர்கள்:—திரு. மு. துரைராசசிங்கம் திரு. து. சிதம்பரப்பிள்ளை திரு. மு. கந்தையா திரு. க. சிவலிங்கம் திரு. கா. பொ. முத்துக்குமாரசாமி திரு. ஆ. வே. நடராசா திரு. வை. சோமலிங்கம் திரு. மு. தர்மலிங்கம் திரு. க. மகாதேவன் திரு. க. ஆறுமுகம்.

திரு. சோ. சின்னத்தம்பி அவர்கள் கௌரவ எண்பார்வையாளராக தெரிவுசெய்யப்பட்டார், செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தசாமி கோவிலைக் கட்டிய செண்பகப் பெருமாள் தமிழனே!

# அவன் சிங்களவனல்லன்!

'சுதந்திரன்'(16-4-78) இதழில். செ. நாகலிங்கம் அவர்கள் எழுதியிருந்த தமிழீழ வரலாற்றுக்கட்டுரை படித்தேன். திறம்பட அதனை எழுதியிருந்த ஆசிரியருக்கு எம்நன்றி. ஆனால், அதனில் அறியாமை காரணமாக விளைந்துள்ள ஒரு தவற்றைத் திருத்துவது நம் கடமையாதலால் இக்கருத்து விளக்கத்தை வாசகர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

கட்டுரையாசிரியர், நல்லூர்க் கந்தசாமி கோவிலைக் கட்டுவித்தவன் செண்பகப் பெருமாள் என்று குறிப்பிட்டுள்ள அதே சமயத்தில், "யாழ்ப்பாண அரசுக்கு எதிராக சப்புமல் குமாரய அல்லது செண்பகப் பெருமாள் என்ற சிங்கள இராசகுமாரன் படையெடுத்து வந்து வென்று... "எனவும் குறிப்பிட்டுள்ளது தவருகும்.

ஆசிரியர் கூறும் இன்னெரு கருத்து, 'மகாவம்ச' நூலைப் பற்றியது: "ஒரு பெருங்குறை என்னவென்ருல், பல பிரதான விஷயங்களை, அதிலும்தமிழர்களைப்பற்றியவிஷயங்களை மூடி மறைத்ததேயாகும்." என்பதாம் இது முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். இதே 'மகாவம்சம்', "செண்பகப் பெருமாள் என்ற சிங்கள இராசகுமாரன் படையெடுத்து வந்து வென்றதை" ஏன் மறைக்க வேண்டும்? அவன் சிங்களவனுகில்,"மகாவம்சத்தில்' இவ்வரலாறு பிரமாதப்படுத்தி எழுதப்பட்டிருக்கும். செண்பகப் பெருமாள் ஒரு தமிழன் என்பதாலேயே, ஒரு தமிழன் யாழ்ப்பாணத் தமிழரசனை வென்றகதையை 'மகாவம்சம்' இருட்டடிப்புச் செய்துவிட்டது எனக் கொள்வதே சரியாகும். அத்துடன், செண்பகப் பெருமாள் ஒரு சிங்களவனுகில், அவன் நல்லூர்க் கந்தசாமி கோவிலைக் கட்டுவதில் கூடிய ஊக்கமெடுத்திருக்க வேண்டியதில்லையே! இவற்றிலிருந்து விளங்குவது என்னவெனில், செண்பகப் பெருமாள் தமிழனேயன்றி சிங்களவனல்ல. பிற்கால சிங்கள வரலாற்ருசிரியர்கள், 'செண்பகப் பெருமாள் எனும் தமிழ்ப் பெயரை 'சபுமால்' எனத்திரித்து அவனைச் "சிங்களவனுக" மாற்றி சிங்களவன், யாழபபாணத் தமிழரசனை வென்றதாகக் கதை கட்டி விட்டனர்.

## பெருமாள் எனும் பெயரும் விளக்கமும்

'பெருமாள்' எனும்பெயர் இந்திய வம்சாவளித் தமிழரிடையேதான் பெரும்பாலும் பாவனையிலிருந்து வந்துள்ளது வருகின்றது. இலங்கைவாழ் இந்துத்தமிழர்கள் முற்றிலும் சைவர்களாகவே இருந்ததால், வைணவசமயப் பெயராகிய "பெருமாள்" எனும் பெயர் இவர்களிடையே அதிகம் நிலை பெறவில்லை; அவ்வப்போது இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறிய இந்துத் தமிழர்களில் வைணவர்களும் இருந்ததால், அவர்களுடைய சந்ததிகளிடையே "பெருமாள்" எனும் சற்றுப் பெயர் வழங்கப்பட்டு வந்துள்ளது. செண்பகப்பெருமாள் எனும் பெயருடைய அரசனும் இந்திய வம்சாவளியினனே.

மிகவும் அதிசயிக்கத்தக்க விடயம் என்னவெனில், சிங்கள சமூகத்தாரிடையே "பெருமாள்" எனும் பெயரின் திரிபான "பெருமா" எனும் பெயர்கள் இன்றும் அதிகளவில் பாவனையில் உள்ளன. உதாரணத்துக்குச் சில பொன்னம்பெருமா(ள்), தேவப்பெருமா(ள்), குமாரப் பெருமா(ள்), நலலப்பெருமா(ள்), இளையபெருமா(ள்), சூரியப்பெருமா(ள்) ஜீவப் பெருமா(ள்), வீரப்பெருமா(ள்), அழகப்பெருமா(ள்); இப்பெயர்களை தற்போது வைத்துக் கொண்டிருக்கும் சிங்களவர்களின் மூதாதையர்கள், இந்தியவம்சாவளித் தமிழரே என்பதுமேற்கூறியவற்றிலிருந்து புலப்படுகின்றது. மேலும் இப்பெயர்கள் கீழ்நாட்டு அல்லது கரையோரச் சிங்கள பௌத்தர்களிடையேதான் அதிகளவு நிலவுகின்றன. கரையோரப் பகுதிகளில்தான், கலப்பு

**ச: சிறீகாந்தா**

மணம் அதிகளவில் நடந்ததால், இந்திய வம்சாவளித் தமிழர்கள், தம் மொழியையும் மதத்தையும் மாற்றி, தம் தனித்துவத்தையும் இழந்துள்ளார்கள் என்பது யாவரும் அறிந்ததே.

மேலும், மேற்குறிப்பிட்ட பெயர்களின் முதல் அடிகளை நோக்கினல், அவை நல்ல தமிழ்ச் சொற்களாக இருப்பதையும் காணலாம். உதாரணங்களைப் பாருங்கள்.

(1) 'பொன்னம்'-(பொன்னம்பலம், பொன்னுத்துரை, பொன்னுச்சாமி ஆகிய தமிழ்ப் பெயர்களுடன் ஒப்பிடுக.)

(2) 'நல்ல'— (சிங்கள மொழியில் 'நல்ல' என்பதற்கு 'ஹொந்த' என்று வழங்கப்படுகிறது. ஆனல், ஹொந்தப்பெருமா என்ற பெயர் வழக்கிலில்லை. 'நல்ல' என்ற சொல்லும் சிங்களவரிடையே பாவனையில் இல்லை.)

(3) 'இளைய' — (சிங்கள மொழியில் 'இளைய' என்பதற்கு 'கனிஷ்ட' என்பது வழக்கு. ஆனல், கனிஷ்ட பெருமா என்ற பெயர் வழக்கிலில்லை.)

(4) 'அழக' சிங்களமொழியில் 'அழக' அல்லது 'அழகு' என்பதற்கு 'ரூப' அல்லது 'சுந்தர' எனும் சொற்கள் வழக்கிலுள்ளன. (ரூபசிங்க, ரூபாவதி, ஜயசுந்தர, ராஜசுந்தர எனும் பெயர்களைக் கவனிக்கவும்.) ஆனல், ரூப பெருமா, சுந்தரப்பெருமா எனும் பெயர்கள் வழக்கிலிலலை.

மேலும், கடந்த இருநூற்ருண்டுகளுக்கும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வியாபாரத்துககு வந்த செட்டிநாட்டார், கொழும்பில் வாணிகத்தைத் தொடக்கி, "கொழும்புச்செட்டிகளாக" மாறினர். இவர்களிடையேயும் 'பெருமாள்' எனும் பெயர் நிலைத்துவருகின்றது. ஆனல், அந்தோ பரிதாபம்—கலபபு மணத்தால் மொழி மாறி, மதம் மாறி, ஆறேழு சந்ததிகள் கழியுமுன்னரே 'Hugh Perumal' 'Joe Perumal' எனப் பெயரளவில் மட்டும் தமிழர்களாக, அவர்கள் இன்று எம்மிடையே நிலவுகின்றனர்.

## பெருந்தன்மை...

—7-ம் பக்கத் தொடர்

அவர்களே கூட எதிர்க்கட்சித்தலைவர் என்ற முறையில் "பெருந்தன்மை"யைப் பேணி நடக்கவேண்டிய நிலையில அவருக்கே விருப்பமற்ற இற்சில சம்பிரதாயங்களை கடைபிடிக்க வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு வேண்டா வெறுப்புடன் பணிய வேண்டிய நிலைக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் தள்ளப்பட்டிருந்தது கண்டு உண்மையிலேயே அவ்வப்போது வேதனை அடைந்தோம்.

போலித்தனமான பெருந்தன்மைப் போக்கிலிருந்தும் பாழாயப்போன சம்பிரதாயங்களுக்கு அடிபணியும் மனமயக்கத்திலிருந்தும் தமிழன் என்று விடுபடுகிருனே அன்றே அவன புத்திசாலியாவான்! அதற்குப் பின்பே தமிழினம்தலைநிமிரும். அதுவரை பெருந்தன்மையாற் கெடும் பேயனுகவே தமிழன் இருந்துகொண்டிருப்பான்!

## ரௌலட் சட்ட...

—3-ம் பக்கத் தொடர்

சரஸ் நகரில் ஊரடங்குஉத்தரவு அமுலிலிருந்தது.

பஞ்சாப் படுகொலை நடந்தபோது, மைக்கேல் ஓட்லியர் என்பவன் பஞ்சாபில் ஆளுநர் பொறுப்பில் இருந்தான். அவனும்.ஜெனரல் டயருக்குத் தூண்டுதலாக அமைந்தான்.

ஜெனரல் டயர் பிரிட்டனில் விசாரிக்கப்பட்டான். அப்போது, அவன், தான் செய்த படுகொலை நியாயமென்று வாதாடினன். "சுட்டேன், சுட்டேன்; மருந்துள்ளவரை சுட்டேன். இன்னும் மருந்து இருந்திருந்தால் சுட்டிருப்பேன்" என்று இருமாந்து கூறினன். அவன் பாராட்டப்பட்டான் பிரிட்டிஷாரால்!

இந்தக் கொடுமையைத் தான் "பஞ்சாப் படுகொலை" என்று பாடினன் தமிழ்க் கவிஞன்.

"பாரிற் கொடியது, பழிப(ா)வமுடையது" என்று கூறிப் பதறினன். 1919 தொடங்கி 1947 வரையுள்ள 28 ஆண்டு காலம் பஞ்சாப் படுகொலை என்ற பாடலைப் பாடாத நாடக மேடையே தமிழ் நாட்டில் இல்லை எனலாம். அதைப் பாடியதற்காக நடிக—நடிகையர் பலர் சிறைத் தண்டனை பெற்றனர். போலீசாரிடம் அடியும் உதையும் பட்டனர்.

சரித்திரத்தில்இடம்பெற்றுவிட்ட ஏப்ரல் 6ந் தேதி முதல் 13ந் தேதி வரை நாடு முழுவதிலும் நடைபெற்ற "ரௌலட சட்ட" எதிர்ப்புப் போராட்டம் தான் காந்தியடிகளின் தலைமையின் கீழ் பாரதத்தைக் கொண்டு வந்தது. தேசவிடுதலைப் போராட்டத்திலே ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது.

## 'மாலேக காரியாலயம்' 'அரசாங்க செயலகம்' ஆக மாறியது!

அனுராதபுரம் அரசாங்க செயலகத்தில் (கச்சேரியில்) புதிதாக அமைக்கப்பட்ட பெயர் பலகையில் சிங்களத்தில் மாலேகம் காரியாலயம் என்றும் அதையே தமிழிலும் மாலேகம் காரியாலயம் என்றும் அமைத்திருந்தார்கள் அல்லவா தமிழில்மாலேகம் காரியாலயம் என்றுள்ள எழுத்துக்களை அழித்து உடனடியாக "அரசாங்க செயலகம்" என்று மாற்றும் படி அனுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் (கொன்தரக்த்காரருக்கு) கட்டிட வேலையை பொறுப்பேற்றிருந்த வருக்கு பணித்ததின் பேரில் வெகு விரைவில் அதை நிறைவேற்றியுள்ளார்கள், இப்போது மாலேகம் காரியாலயம் என்றிருந்த பெயர்ப்பலகையில் "அரசாங்க செயலகம்" என்றும் தமிழ் எழுத்துக்கள் ஒளிவிடுகின்றன.

கலைமதி.


**நண்பர்கள் தேவையா**



அனைத்துலக கலாசார நட்புறவு விபரங்களுக்கு தபாற்செலவுடன் விண்ணப்பியுங்கள்; "சந்திரோதயம்," சர்வதேச பேனு நண்பர்கள் தலைவர், 265/8, சேர்ப்பன் டைன் பாதை, பொரளை. கொழும்பு—8.



**ஆத்திசூடி**

மில்க்வைற் நீம் சோப் அல்லது 2 பார்சோப் அல்லது 2 நீம் சோப் அல்லது 2 மெடிக்கேட்டட் சோப் அல்லது 2 சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி உரையுடனும், ஆங்கில மொழிபெயர்ப்புடனும் கூடிய மேற்படி புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற்-யாழ்ப்பாணம்**



**இப்போது விற்பனையாகிறது**

மூதறிஞர் தந்தை செல்வா அவர்களைப் பற்றிய ஆங்கில நூல்.

தந்தை செல்வா பற்றி
ஒன்பது வெவ்வேறு துறை அறிஞர்கள்
வெவ்வேறு கோணங்களில் எழுதியுள்ளனர்

முன்னுள் நீதிபதி என். சின்னத்தம்பி.
திருமதி ரூஷன் பீரிஸ், டாக்டர்எம். சி. எம். கலீல்,
திரு. எம். ராஜேந்திரா, வண. பிதா. குலேந்திரன்,
பி. எச். நொனிஸ், இவா பசுபதி,
விக்டர் தென்னக்கூன், சிவசுப்பிரமணியம்;
ஆகியோரின் ஆங்கில கட்டுரையின் தொகுப்பு

**விலை ரூபா 5-00**

வியாபாரிகளுக்கு 20 வீதம் கழிவு உண்டு.
வேண்டுவோர் தொடர்பு கொள்க;
அருள்மா. இராசேந்திரன்,
111, பிக்கறிங்ஸ் வீதி,
கொழும்பு.11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தன்மையாற் கெட்டலையும் பேயன்தானா தமிழன்?

ஈழதாசன்

'பெருந்தன்மையாற் கெட்ட பேயனுக்குப் பேர் தமிழன்' என்று கூறினார் உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன். தமிழர்கள் தங்கள் நாட்டை இழந்து அரசுரிமையை இழந்த நிலையிலும் போலித்தன்மையும், அர்த்தமற்ற பரந்த மனப்பான்மையும் கடைப்பிடித்து தம்மைத்தாமே அழித்துக் கொள்வார்கள் போலத் தோன்றுகிறது.

தமிழினம் பரந்த மனப்பான்மைக்கும் பெருந்தன்மைக்கும் பெயர்பெற்றது தான்; யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று பெருவாழ்வு வாழ்ந்தது தான். ஆனால் அது எப்பொழுது?

தமிழன் யாருக்கும் தாழாமல் அடிமையாக வாழாமல் தனது சொந்த தமிழ் நாட்டைத்தானே ஆண்டு தலை நிமிர்ந்து வாழ்ந்த போதுதான் பண்டைத்தமிழன் பெருந்தன்மை பேசினான்; பரந்த மனப்பான்மை காட்டி உலகம் முழுவதையும் தழுவிக்கொண்டான். 'யாதும் ஊரே — யாவரும் கேளிர்' என்று உலகப் பொதுமை பேசினான். அதாவது தன்காலில் தன் பலத்தில் தன்னுடைய அடித்தள வாழ்வை அமைத்து தலை நிமிர்ந்து வாழ்ந்த போதுதான் பண்டைத் தமிழன் 'பெருந்தன்மை' பேசினான்; தன் நாட்டுக்கும், மொழிக்கும். இனத்துக்கும் ஆபத்து ஏற்படும் காலங்களில், அழிவு ஏற்படும் சூழ்நிலைகளில் பழந்தமிழன் பெருந்தன்மை பேசிக் கொண்டிருக்கவில்லை; எதிரிகளுடன் வாள்முனையில் பேசினான்.

ஆனால் இற்றைத் தமிழனோ — தன் நாடும் அரசுரிமையும் சுதந்திரமும் இழந்த நிலையில் — உலகெலாம் அடிமைகளாக வாழ்ந்து கொண்டும்— பெருந்தன்மை பேசிக் கொண்டிருக்கிறான்; பரந்த மனப்பான்மை பேசுகிறான்; உலகப் பொதுமை பற்றி உரத்துப் பேசுகிறான்.

ஐயோ பாவம், தன்னிலை உணராமல் தமிழன் இன்று ஊருக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கிறான்!

## அன்று கருணாநிதி!

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் பேரறிஞர் அண்ணாவின் அன்புத்தம்பியும் திமுகதலைவருமான கலைஞர் கருணாநிதி அவர்கள் தமது இதயத்தில் ஒவ்வொரு மணித்துளியும் தமிழன்படும் இன்னல்களை எண்ணி எண்ணிக் குமுறிக்கொண்டிருப்பவர். தமிழகத்தின் பூரண அரசுரிமையை மீட்டு பண்டைத்தமிழகம் போல புதிய தமிழகத்தை ஆக்க வேண்டுமென்று துடித்துக்கொண்டு இருப்பவர். ஈழத்தமிழனின் இழிநிலைகண்டு — சிங்களவர் செய்கின்ற இனப்படுகொலையைப்பார்த்து சீறி எழுபவர்; ஈழத்தமிழர்களுக்காக எத்தனையோ ஆர்ப்பாட்டங்களையும் தமிழ் நாட்டில் நடத்தியவர். ஈழத்தமிழன் நெஞ்சில் நீங்கா இடத்தைப் பெற்றவர்.

அப்படிப்பட்ட கலைஞர் கருணாநிதி அவர்கள்-1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் மாநாட்டின் போது பத்துத் தமிழர்களை பாடையேற்றிவிட்டு, இரத்தக்கறைகாயமுன் இந்தியா சென்ற அந்நாள் சிங்களப் பிரதமர் சிறிமா பண்டாரநாயகாவை சென்னை விமான நிலையத்தில் வைத்து அன்று வரவேற்றார் என்றால்—இதய நிறைவுடனேயோ அல்லது ஈழத்தமிழருக்கு நடந்த துன்பம் தெரியாமலோ அப்படிச் செய்திருப்பாரென்று கூறமாட்டோம். கலைஞரின் உள்ளம் உலகத்தமிழ் மாநாட்டில் நடந்த படுகொலையைக் கேட்டுபொங்கியெழுந்திருக்கும்; அவரது இதயத்திலும் இரத்தம் கசிந்திருக்கும் — ஆனாலும் அதையெல்லாம் மூடிமறைத்துக்கொண்டு அன்று சிறிமாவோவை வரவேற்கச் சென்றார் என்றால் அன்று ஆட்சிப்பொறுப்பிலிருந்த காரணத்தினால் வெறும் அரசியல்சம்பிரதாயத்துக்காகத் தான் அவ்வாறு நடந்து கொண்டாரென்பதை நாம் அன்றே அறிவோம்.

வெறும் போலித்தனமான பெருந்தன்மையை — சம்பிரதாயத்தை — கலைஞர் அவர்கள் அன்று கடைப்பிடிக்கவேண்டிய நிலையிலிருந்தார்.

## இன்று எம்.ஜி.ஆர்.

அதேபோல — சென்ற ஆண்டு ஆவணியில் இலங்கையில் பயங்கர இனக்கலவரம் நடைபெற்றதும். தமிழர்களும் தமிழ்ச்சிகளும். தமிழ்ச்சிறார்களும் பயங்கரமாக படுகொலைசெய்யப்பட்டதும். தமிழர் வீடுகள்—கடைகள் சூறையாடப்பட்டு எரிக்கப்பட்டதும் தமிழ் மக்கள் தெருவீதிகளுக்கு அகதிகளாக விரட்டப்பட்டதும் உலகமறிந்த சம்பவங்கள். இந்தக்கலவரத்தின்போது இலங்கையின் பூர்வ குடித் தமிழர்கள் மட்டுமன்றி இந்திய வம்சாவளித்தமிழர்கள், மலையாளிகள், தெலுங்கர்கள் அனைவருமே சிங்களவர்களால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.

கலவரம் நடைபெற்றபோது அவசரகாலச் சட்டத்தை பிரயோகித்து உடனடியாக அதை அடக்காமல் தேசிய அரசுப்பேரவையில் தமிழ் பா.உக்களைப்பார்த்து "யுத்தம் என்றால் யுத்தம்—சமாதானம் என்றால் சமாதானம்" என்றுவீறுப்பு பேசினார் அப்போதைய பிரதமர் ஜே. ஆர். இந்தப்பேச்சினால் சாதாரண சிங்களவர்களும் தூண்டப்பட்டு தமிழர்களைத் தாக்கினார்கள்.

இங்கு தமிழர்கள் தாக்கிக் கொலை செய்யப்பட்டபோது அதைச் சகிக்க முடியாமல்-இலங்கைத்தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுவது குறித்து தமிழகத்தின் நாலரைக்கோடி தமிழர்களின் கண்டனத்தை தெரிவித்தும் இலங்கையில் நடப்பதுபற்றி விசாரிக்க இந்திய அரசு ஒரு தூதுக்குழுவை அனுப்ப வேண்டுமென்று கோரியும் தமிழ் நாடு சட்டசபையில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியவர் இலங்கையில் பிறந்த இன்றைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அப்படிப்பட்ட எம்.ஜி.ஆர் அவர்கள்-இலங்கையில் தமிழன் சிந்திய இரத்தம் காயமுன்னர்-சிங்கள இனவெறியின் கொடுமைகளால் ஏற்பட்ட காயங்கள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆறமுன்னர்-இலங்கை அரசின் வெளியுறவு அமைச்சர் ஹமீது அவர்கள் அண்மையில் சென்னை சென்றிருந்த போது அவருக்கு விருந்தளித்துக் கௌரவித்திருக்கிறாரென்றால்-இதன் பொருள் இலங்கைத் தமிழன் சிந்திய கண்ணீரையும்,கொட்டிய இரத்தத்தையும் எம்.ஜி.ஆர் அதற்குள் மறந்துவிட்டாரென்பதல்ல-பாழாய்ப்போன சம்பிரதாயங்களும், தமிழனுக்கேயுரிய பெருந்தன்மை என்ற மாயாவாதமும் தான் காரணம் என்பதை நாம் அறிவோம்.

இதே அமைச்சர் ஹமீது லண்டன்சென்றிருந்தபோது அங்குள்ள துடிப்புள்ள தமிழ் இளைஞர்கள் அமைச்சரிடம் கேள்வி கேட்டு துளைத்தெடுத்ததுடன், அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டமும் செய்ததை நாடறியும்.

ஆனால் நாலரைக்கோடி தமிழர்களின் தாய்த்திரு நாட்டில் அமைச்சருக்கு வயிறார விருந்தும் கௌரவமும் கிடைத்தது என்றால்-பாழாய்ப்போன தமிழனின் பவிசு கெட்டபெருந்தன்மையிலும் சம்பிரதாயங்களை பின்பற்றும் பத்தாம்பசலிக் குணத்திலும் இடிவிழ என்று கூறுவதைத்தவிர வேறுநாம் என்ன கூற முடியும்?

## இங்கும் அதே நிலைதான்!

வெளிநாடுகளில் மட்டுமல்ல—இங்கு மட்டும் என்ன வாழ்கிறதாம்? தமிழ் ஈழ விடுதலை வேண்டிநிற்கும் எங்கள் தமிழ் பா. உக்களும் இந்தப் "பத்தாம்பசலி" பெருந்தன்மையிலிருந்தும் தேவையற்ற போலி சம்பிரதாயங்களுக்கு அடிபணியும் போக்கிலிருந்தும் இன்னும் விடுபடாதிருப்பது வேதனை தருவதாகும்.

எமது தமிழீழ முதல்வர் தலைவர் அமிர்தலிங்கம்

—6-ம் பக்கம் பார்க்க

# சங்கப் பலகை

## S. J. V. Chelvanayakam — A Tribute

இலங்கையின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஒன்பது அறிஞர்கள் தந்தை செல்வா பற்றி எழுதியுள்ள ஆங்கிலக் கட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவில் மேற்கண்ட தலைப்பில் வெளியிட்டுள்ளார் தந்தை செல்வாவின் அந்தரங்க செயலாளராக அவருடைய இறுதிக்காலத்தில் பணியாற்றிய திரு. அருள் மா. இராசேந்திரன்.

இளைப்பாறிய நீதிபதி திரு. என். சின்னத்தம்பி, பத்திரிகையாளரான திருமதி ரேஷன் பீரிஸ், முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் கலீல், இளைப்பாறிய திறைசேரி செயலாளர் திரு.எம்.ராஜேந்திரா, இளைப்பாறிய வண. பிஷப் குலேந்திரன், இளைப்பாறிய கல்லூரி அதிபர் திரு. பி. எச். நோனிஸ், சட்டமா அதிபதி திரு. சிவா பசுபதி முன்னாள் பிரதம நீதியரசர் விக்டர் தென்னக்கூன் சட்டத்தரணி திரு. சிவசுப்பிரமணியம் ஆகிய ஒன்பதின்மர் தங்கள் கண்ணோட்டத்தில் கண்ட தந்தை செல்வாவின் குணாதிசயங்களையும் ஆற்றலையும் பல கோணங்களில் தமது கட்டுரைகளில் விமர்சிக்கின்றனர்.

தந்தை செல்வா அவர்களின் நினைவு நாள் கூட்டங்கள் தமிழ் ஈழமடங்கும் நடைபெற்றுவரும் சமயத்தில் தந்தையைப் பற்றி ஒரு பயன்தரத்தக்க இந்த ஆங்கில நூலை திரு. அருள் இராசேந்திரன் அவர்கள் தொகுத்து வெளியிட்டுள்ளது பாராட்டப்பட வேண்டியதாகும்! நூலுக்கு தந்தையின் அரசியல் வாரிசெனக்கருதப்படும் திரு. அ. அமிர்தலிங்கம் எழுதியுள்ள அணிந்துரை அழகு செய்கிறது.

தனிப்பிரதி விலை ரூபா 5-50

கிடைக்கும் இடம்:
அருள் மா. இராசேந்திரன்
111, பிக்கறிங்ஸ் வீதி,
கொழும்பு-13.

## உலகத் தமிழர் குரல்

உலகத்தமிழ் பண்பாட்டியக்கத்தின் ஏடாகிய "உலகத் தமிழர் குரலின்" பங்குனி இதழ் சென்னைமாநாட்டுச் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. சென்னைமாநாட்டில் கலைஞர் மு. கருணாநிதி, தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். ஆகியோர் ஆற்றிய உரைகள், அந்தமான், மலேசியா, சிங்கப்பூர், மோரிஷியஸ், பர்மா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் தமிழும் தமிழினம்படுகின்ற வேதனைமுட்டும் செய்திக் கட்டுரைகள் ஆகியன இடம்பெற்றுள்ள இந்த இதழில் இரா. கனகரத்தினம் எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கம், மாநாடு பற்றிய ஓர் அருமையான விமர்சனமாக அமைந்துள்ளது. மாநாட்டுத் தீர்மானங்கள், மோரிஷியஸ் நிதியமைச்சரின் செய்தி அடுத்த மாநாடு பற்றிய குறிப்புக்கள் இலங்கைகிளை துணைப்பொதுச் செயலாளரின் கட்டுரை ஆகியன இதழுக்கு அணி செய்கின்றன. விலைசதம் ஐம்பது மட்டுமே. யாழ்ப்பாணத்தில் ராஜன் புத்தக சாலையில் விற்பனைக்குண்டு.

* *

## லண்டன் முரசு

லண்டன் முரசு பங்குனி இதழ் கிடைக்கப்பெற்றோம். அமெரிக்காவில் பிட்ஸ்பர்க் நகரில் புதிதாககட்டப்பட்ட வெங்கடேஸ்வரர் கோவிலின் எழில் தோற்றத்தை முன்புறஅட்டையில் கொண்டுள்ள முரசில், தாய் நாடுகளின் செய்திகள், மேற்கு நாடுகளின் செய்திகள், திரைச்செய்திகள், தமிழ்த் தொண்டர்கள் அறிமுகம், சிறுகதைகள், ஞானசூரியன் எழுதிவரும் "உலகத்தமிழ் அரசியல் நினைவலைகள்" ஆகியன இடம் பெற்றுள்ளன.

மீண்டும் வெளிவரவிருக்கிறது!

தமிழ் மொழியின் இன்ப நாதம்!
தமிழ் மக்களின் இதய தீபம்!
தமிழ் மண்ணின் விடுதலை கீதம்!

தீப்பொறி

ஆசிரியர்: ம. க. அ. அந்தனிசில்
பக்கங்கள் எட்டு பாருங்கள் தொட்டு.
விலை சதம் 60. மாதமிரு முறை
நாடெங்கும் கிடைக்கும்
ஏஜண்டுக்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது. சுதந்திரன் 23-4-78

# கொழும்பு வளாகக் கலை விழாவும் சிங்களப் பாடலும்!

—ஒரு கருத்து ச. ஸ்ரீகாந்தா

“சுதந்திரன்” 16-4-78 இதழின் கடைசிப்பக்கத்தில் “தமிழ் கலை விழாவில் சிங்களப்பாடலா?” எனுந் தலைப்பில் அமைந்துள்ள மணிவண்ணனின் கருத்துக்கு விளக்கமளிக்கும் வகையில், அன்று நடந்த நிகழ்ச்சிகளில் பார்வையாளனுகக் கலந்து கொண்டவனென்ற முறையில் என் கருத்தையும் ‘சுதந்திரன்’ வாசகர்களுக்கு அறியத் தருகின்றேன்.

அன்று நடந்த பரத நாட்டியமாடிய சிறுமியின் ஆசிரியை ஒரு சிங்களப் பெண்மணியாவார். அவர் பெயர், திருமதி. கமலா ஜயதிலகா, இலங்கையில் பரதநாட்டிய அரங்கேற்றம் செய்த முதற் சிங்களப்பெண்மணி இவரே. இவர் தனது மாணவிகளைக் கொண்டு நடத்தும் நடன நிகழ்ச்சிகள் பலவற்றில், ஒரு சிங்களப்பாடலுக்கு அபிநயம் பிடித்து ஆடவைப்பது வழக்கம், பரதநாட்டியத்தில் இம்மாதிரிப்பரிசோதனை வழிகளை (experimental methods)கையாள்வது அவரின் தனிச்சிறப்பு. அவ்வாசிரியையின் தாய்மொழிப் பற்றுக்கு நாம் மதிப்பளிக்கத்தான் வேண்டும். ஆனல், தவறு அவருடையதல்ல. இந்நாட்டிய நிகழ்ச்சியை ஒழுங்கு செய்த கொழும்பு வளாகத் தமிழ்ச்சங்கக் குழுவினரையே தவறு முற்றிலாகச் சாரும். ஏனெனில், இவர்கள் அந்த நடன ஆசிரியையை நாட்டியநிகழ்ச்சிக்கு ஒழுங்கு செய்யும் போது, “சிங்களப் பாடல் எதனையும் இத்தமிழ் கலைவிழாவில் நீங்கள் சேர்க்காமலிருப்பது நன்று” என அவரைக் கேட்டிருப்பின்; அவர் நிச்சயமாக அதனைத் தவிர்த்திருப்பார் என்றே நான் நினைக்கின்றேன்.

மேலும், தமிழீழத்தின் தேசிய கீதம், பரத நாட்டியத்தின் போது பாடப்பட்டது பற்றிவந்துள்ள செய்தி தவறனது. அன்று பரத நாட்டியத்திற்கு நட்டுவாக்கம் செய்த பெண்மணி பாடியது. “ஈழமணித்திருநாடே” எனும் பாடலாகும். எமது தமிழீழத்தின் தேசிய கீதமானது “வாழ்க ஈழத்தமிழகம் வாழ்க இனிது வாழ்கவே; மலை நிகர்த்திவ்வுலகில் என்றும் தலைநிமிர்ந்து வாழ்கவே” என்பதாகும். தமிழீழத்தின் தேசிய கீதத்தை கொழும்பில் இடம்பெறும் பரதநாட்டிய நிகழ்ச்சிகளிலே நான் இதுவரை ஒரு போதுமே கேட்டதில்லை!

— ச. ஸ்ரீகாந்தா

## சுதந்திரன் சந்தா

ஓராண்டுச் சந்தா ரூ. 50.00

அரை ஆண்டு „ ரூ. 25,00

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

“சுதந்திரன்”
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


பாவியுங்கள்




றேயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்று ஜோர் தயாரிப்பு

றேயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றேயல் பேக்கிங்பவுடர்
றேயல் கஸ்டட் பவுடர்
றேயல் கோண் பிளவர்
றேயல் பிஸ் மக்ஸ்
றேயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இன்டஸ்றீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) 8-வது வாரம்

எம். ஜி. ஆர். (இரு வேடங்களில்)
வாணிஸ்ரீ, நிர்மலா, பி. எஸ். வீரப்பா,
தேங்காய் ஸ்ரீனிவாசன் மற்றும் பலர் நடித்த—
ஊருக்கு உழைப்பவன்



4-வது வெற்றி வாரம்

கெயிட்டி [கொட்டாஞ்சேனை]

கமலாலயம் மூவீஸ் அளிக்கும்

வாடைக் காற்று

றீகல் [மட்டு நகர்]

சிவகுமார், ஜெயசித்ரா, ஸ்ரீகாந்த், நாகேஷ், சுந்தரராஜன் நடித்த-

வெள்ளிக்கிழமை விரதம்

கிங்ஸ்லி (கொழும்பு) 7-வது வாரம்

ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா நடித்த

ஜானகி சபதம்

6-வது வாரம்

வெலிங்டன் (யாழ்நகர்) பிளாஸா (வெள்ளவத்தை)

சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த—

கிரகப்பிரவேசம் (கலர்)

2-வது வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) லிடோ (யாழ்நகர்)

சிவபாதவிருதயர் BSc., வேதநாயகம், டீன்குமார், ஜவாகர், சந்திரகலா, ஹெலன், செல்வம், அமரசிங்கம் நடித்த ஒப்பற்ற திரையோவியம்!

ராஜேஸ்வரி பிலிம்சாரின்

தென்றலும் புயலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு